[4th November 1966

அல்ல. கூடுமானவரையில் அங்கஹீனமானவர்கள் எந்த வேலைக்குத் தகுதியோ அந்த வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றுதான் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதுகுறித்தும் அரசாங்கத்தினால் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆசிரியர்கள் சம்பளமும், படியும்

*383 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மலைப் பிரதேசங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் ஹில் அலவன்ஸை உயர்த்தக் கோரி ஆனைமலை ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் 13—4—1965-ல் கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) In June 1961, the Government had already sanctioned the Hill allowance to the teachers employed in hilly tracts like the Nilgiris, Palni, Anamalai Hills and Kolli Hills at the rates admissible under the rules. Hence no action was necessary on the above request.

* 384 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of trained Secondary Grade or Senior Basic teachers employed in Panchayat Unions, Local Bodies and Private Schools getting Higher Grade or Junior Basic scale; and

(b) will the Government come forward to provide Secondary Grade scale for them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) About 5,000.

(b) No.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஏராளமான செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு சம்பளம் பெற்று வேலை செய்யக்கூடிய ஒரு நிலைமை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் அன்ட்ரெயின்டு ஆசிரியர்களும் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி நிலைமை பல பகுதிகளில் இருக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து அந்தப் பகுதிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு வழிவகை செய்வது பற்றி யோசிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பள்ளிகளில் எத்தனை செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குப் பணியாற்றுகிறவர்களுக்கு அதற்குத் தகுந்த சம்பள விகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வைத்துக்கொள்வதற்கு ஒரு லட்சியமும் இருக்கிறது. எந்த அளவுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு மேலே செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஒரு பள்ளியில் பணியாற்றுகிறார்கள் என்றால், அவர்களுக்கு ஏற்கனவே உள்ள சம்பளவிகிதம்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒருசில இடங்களில் பயிற்சி பெறாத ஆசிரியர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அந்த இடங்களுக்கு அத்தகைய ஆசிரியர்கள் போவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இதெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கிற தகவல்படி 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர்கிரேடு ஆசிரியர்களாக பணி செய்யக் கூடிய நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைக்கு இணங்க மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்றால், ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்ஸ், எலிமெண்டரி ஸ்கூல்ஸ் உள்பட எல்லாப் பள்ளிகளிலும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வகுப்புதோறும் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

*** 385. கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் நீண்டகாலமாக பணியாற்றிவரும் நெசவு ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) They were not fully qualified for regular appointment.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி எத்தனை ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் ? எத்தனை ஆண்டுகளாக இருக்கிறார்கள் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். ஆனால், போதிய தகுதி இல்லை என்றால், அவர்களை நிரந்தரம் ஆக்குவது சரியல்ல என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.